# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.23 நாள் 03.03.2026

| CC. No. | 242/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | பழனியப்பன் | க/பெ. | பிச்சையப்பா செட்டியார் |
| வயது | 75 | தொழில் | Medical Wholesale |
| கிராமம் | Thiruvarur | தாலுக்கா | Thiruvarur. |

(**1ம் எதிரி ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது), A2 dispensed with**).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது திருவாரூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஓய்வில் உள்ளேன். திருவாரூரில் ராஜா ஏஜென்சி என்ற பெயரில் மருந்து மொத்த வியாபாரம் செய்து வருகிறேன். தற்போது, அந்த நிறுவனத்தை எனது மகன் நடத்திவருகிறார். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மருந்த பிரிவிற்கு நான் மருந்து பொருட்கள் சப்ளை செய்துள்ளேன். அதற்குரிய தொகைகள் நாங்கள் பெற்றுக்கொண்டுவிட்டோம். எங்களிடம் எவ்வித மருந்து பொருட்களும் கொள்முதல் குறிப்பு என்ற பெயரில் எங்கள் நிறுவனத்திற்கு எதுவும் திருப்பப்படவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 26.04.2011 முதல் 17.10.2013 வரையிலான வரவு செலவு கணினி பட்டியல் எங்களுடையதுதான். அந்த கணினி பட்டியல் மற்றும் ராஜா ஏஜென்சி என்ற பெயரில் உள்ள கணினி Invoice Bill 2 முறையே **அ.சா.ஆ.43** ( பக்கங்கள் எண்ணிக்கை 5)மற்றும் **அ.சா.ஆ.44** ( பக்கங்கள் எண்ணிக்கை 2) ஆகும். அந்த கணினி பட்டியலின் படி 02.05.2012–ன் படி ரூ.206/– மட்டும் Sales Return என்ற வகையில் பில்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கணினி பட்டியலின் படி 14.09.2012–ன் படி ரூ.909/– மட்டும் Sales Return என்ற வகையில் பில்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81–ன் கீழான விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில்

CJM, MAYILADUTHURAI.

உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.45** ஆகும். என்னை வணிக குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

மயிலாடுதுறை கூட்டுறவு மருந்த பிரிவில் எந்த வருடத்திலிருந்து எங்களிடம் மருந்து வாங்கிறார்கள் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. விசாரணை அதிகாரி எங்களிடம் ஆவணத்தை காண்பித்து எங்களிடம் ஏதேனும் கேட்டாரா என்றால் வாய் மொழியாகத்தான் கேட்டார். நான் தாக்கல் செய்த ஆவணங்களை தவிர்த்து மற்ற ஆவணவங்கள் உள்ளது என்றும், வேண்டுமென்றேதான் நான் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றும், விசாரணை அதிகாரி கேட்டதின் அடிப்படையில் கொள்முதல் செய்த அனைத்து விவரங்களை கொடுத்துவிட்டேன். விசாரணை அதிகாரி சொல்லி கொடுத்ததின் பேரில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.